**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 103/2015**

Deposition of witness for வா.சா. 3

Name and Age : **அரசக்குமார் என்ற குமார்**

Father's/Husband Name :

Village and Taluk :

Caste and Religion

:

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (29.01.2026))

குறுக்கு விசாரணை

எனக்கு சொந்த ஊர் இடைகால் ஆகும். நான் தமிழில் தான் கையொப்பம் செய்துள்ளேன். நான் ஜபருல்லாகானுக்காக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கினை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதி கூற்றில் சொல்லி உள்ள சுப்பையா, பார்வதி அம்மாள் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் சுமார் 20 வருடத்திற்கு முன்பு பார்த்துள்ளேன். எந்த வருடம் பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த சொத்தை எழுதி வாங்கியவர்களுக்கும், ஜவஹர்லால்கானுக்கும் என்ன உறவு என்று எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்ததில்லை. அந்த கிரைய பத்திரத்தை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணை உறுதி கூற்றில் குமார் என்று கையொப்பம் செய்துள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த குமார் என்பவர் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் ஜபருல்லாகானுக்காக ஆள்மாறாட்டம் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் வாக்குமூலத்தில் சொல்லி உள்ள விவரங்கள் எல்லாம் யார் சொல்லி டைப் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அதில் என்ன எழுதி உள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது. எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்பதால் சட்டப்படி ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.01.29 14:20:57 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai